### நீதியரசர் ஏ.கே. ராஜன் தலைமையில் குழு! எங்கள் தலைவர் முதல்வராக இருந்தபோது

# சட்டமன்ற சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி நீட் விலக்குத் - தீர்மானத்தை நிறைவேற்றினார்!

## சட்டப்பேரவையில் நீட்தேர்வை ரத்து செய்யக்கோரும் தீர்மானத்தில் டாக்டர் வை. முத்துராஜா பேச்சு!

சென்னை, ஆக. 14–

சட்டமன்றத்தில் நீட் தேர்வு ரத்து செய்யக் கோரும் தீர்மானத்தை தி.மு.க. சார்பில் வரவேற்று டாக்டர் வை. முத்துராஜா பேசுகையில் நீட் தேர்வு குறித்து ஆராய ஒய்வு பெற்ற நீதியரசர் ஏ.கே.ராஜன் தலைமையில் குழு அமைத்தவர் எங்கள் தலைவர் என்றும் சட்டமன்ற சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி நீட் விலக்கு தீர்மானத்தை நிறைவேற்றியவர். முன்பு முதல்வராக இருந்த மு.க.ஸ்டாலின் அவர்கள் என்றும் குறிப்பிட்டார்.

தீர்மானத்தை வரவேற்று டாக்டர் வை. முத்துராஜா பேசியதாவது:

நீட் தேர்வு எழுதாமல் என்னை இந்த சமூகத்தில் ஒரு மருத்துவராக்கி அழகுபார்த்த முன்னாள் முதலமைச்சர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 15 ஆண்டுகாலம் இராயவரம், கடியாப்பட்டி என்ற குக்கிராமத்தில் அரசு மருத்துவராக, வட்டார மருத்துவ அலுவலராக பணியாற்றி, விருப்ப ஓய்வு கொடுத்து மீண்டும் எனக்கு இரண்டு முறை வாய்ப்பு கொடுத்து, இரண்டாம் முறையாக சட்டமன்ற உறுப்பினராக்கிய முன்னாள் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்களை வணங்குகிறேன். எனக்கு இந்தநேரத்தில் இந்த தனித்தீர்மானத்தில் வாய்ப்பளித்து பேசுவதற்கு உறுதுணையாக இருந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும், எங்களது வழிகாட்டிகளையும் வணங்கி எனது உரையை துவக்குகின்றேன்.

இந்த சட்டமன்றத்திற்கு இரண்டாவது முறையாக அனுப்பிய புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், கழக நிர்வாகிகளுக்கும், இந்த அவையில் வீற்றிருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, நீட் தேர்வினை, நீட் விலக்கினை வலியுறுத்தி இந்த அரசு கொண்டுவருகின்ற தீர்மானத்தை எங்களுடைய கழகத் தலைவர் அவர்கள் மற்றும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் திரு. உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி நாங்கள் இதனை ஆதரிக்கிறோம். இந்தச்சமயத்தில் நீட் விலக்கிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட மாடல் நாயகர் எங்கள் தலைவர் அவர்களும், எங்களுடைய இளந்தலைவர் அவர்களும் எடுத்த பல்வேறு முயற்சிகளை இந்த அவையில் நான் சுருக்கமாக பதிவு செய்ய விரும்புகிறேன்.

**நீட் தேர்வை கடுமையாக எதிர்த்தவர் கலைஞர்**

திராவிட முன்னேற்றக் கழகத்தை பொறுத்தவரை, உயர்கல்விக்கு நீட் உட்பட எந்த நுழைவுத் தேர்வுமே இருக்கக்கூடாது என்பதுதான் எங்கள் நிலைபாடு. 2006 ஆம் ஆண்டு நீட் தேர்வு வேண்டுமென்ற நிலை வந்தபோது அதை கடுமையாக எதிர்த்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இன்னும் பெருமையோடு சொல்ல வேண்டுமானால் நீட் தேர்வை இந்தியாவில் முதன்முதலாக எதிர்த்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். நீட் தேர்வு நடைபெற்றால் ஏழையெளிய, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு மருத்துவக் கனவு சிதைந்து போய்விடும். அதனால் நீட் தேர்வு கூடவேகூடாது என்று கலைஞர் அவர்கள் உறுதியாக இருந்தார்கள். அதனால்தான் 2006 முதல் 2011 வரையிலான ஆட்சிக் காலத்தில் நீட் வரவில்லை. இன்னும் சொல்லப்போனால் முன்னாள் முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதா அவர்கள் உயிரோடு இருந்தவரையிலும் நீட் தேர்வை தமிழ் நாட்டிற்குள் கொண்டுவர முடியவில்லை. 2017 ஆம் ஆண்டுதான் நீட் தேர்வு தமிழ்நாட்டிற்குள் வந்தது.

அப்பொழுதே அந்தத் தேர்வை கடுமையாக எதிர்த்தவர் எங்களுடைய கழகத் தலைவர் அவர்கள்.

நீட் தேர்வு வந்த காரணத்தால் 12 ஆம் வகுப்புத் தேர்வில் 1200க்கு 1176 மதிப்பெண்கள் எடுத்தும் அரியலூரை சேர்ந்த தங்கை அனிதா அவர்களால் நீட் தேர்வில் வெற்றி பெறமுடியாமல் போயிற்று. அதனால் அவரால் M.B.B.S. படிக்க முடியாமல் போயிற்று. அரியலூர் மாவட்டத்தில் குழுமூர் என்ற சிறிய கிராமத்தில் பிறந்த அனிதா உச்ச நீதிமன்றம் வரை சென்று நீட் தேர்விற்காக போராடினார்கள். ஆனால் வெற்றி பெற முடிய வில்லை. அந்த சோகத்தில் அனிதா தன்னுடைய உயிரையே மாய்த்துக் கொண்டார்கள். தங்கை அனிதா அவர்களினுடைய தற்கொலைதான் இந்தியாவிலேயே நீட் தேர்விற்கான முதல் பலி. அதைத்தொடர்ந்து தமிழ்நாட்டில் இன்றைக்கு 26க்கும் அதிகமான மாணவ, மாணவிகள் நீட் தேர்வால் மரணம் அடைந்துள்ளனர். அதனால்தான் நீட் தேர்வை ஒழித்தே ஆக வேண்டும் என்று திமுக மிக உறுதியாக இருக்கிறது. இன்றைக்கு இந்தியா முழுவதும் நீட் தேர்வில் குளறுபடிகள் நடக்கின்றன என்று போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றனர். ஆனால் பத்து வருடத்திற்கு முன்கூட்டியே நீட் தேர்வே ஒரு குளறுபடி, நீட் தேர்வு என்பதே ஒரு scam என்று எங்கள் தலைவர் சொன்னார்கள். அத்துடன் நாங்கள் நிற்கவில்லை. திமுக ஒருபுறமும், எங்களுடைய அரசு மறுபுறமும் நீட் தேர்விற்கு எதிராக மக்கள் மன்றம், சட்டமன்றம், நீதிமன்றத்தில் பல்வேறு போராட்டங்கள் நடத்தினோம்.

**நீதியரசர் ஏ.கே. ராஜன் தலைமையில் குழு**

2021 ஆம் ஆண்டு எங்கள் தலைவர் தலைமையிலான ஆட்சி அமைந்ததும் 5.6.2021 அன்று நீட் தேர்வு பாதிப்புகள் குறித்து ஆராய ஓய்வு பெற்ற நீதியரசர் ஏ.கே. ராஜன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு நீட் தேர்வு தொடர்பாக தமிழ்நாடு முழுவதும் அனைத்துத் தரப்பு மக்கள், பெற்றோர்கள், மாணவர்களிடம் கருத்துகளை பெற்றது. அதனடிப்படையில் 14.7.2021 அன்று கழக அரசுக்கு ஒரு அறிக்கையை சமர்ப்பித்தார்கள். அந்த அறிக்கையை வைத்து அன்றைய முதல மைச்சரான எங்களுடைய தலைவர் அவர்கள், தமிழ்நாட்டில் 12 ஆம் வகுப்பு மதிப்பெண்களின் அடிப்படையிலே



மருத்துவம், பல் மருத்துவம், இந்திய மருத்துவம், ஹோமியோபதி உள்ளிட்ட படிப்புகளில் சேரலாம் என்று உறுதி செய்தது.

**நீட் விலக்கு மசோதாவுக்கு சிறப்பு கூட்டம்!**

அந்தவகையில் The Tamil Nadu Admission to Undergraduate Medical Degree Courses Bill, 2021ஐ இதே பேரவையில் 13.9.2021 அன்று கொண்டுவந்தார்கள். இதற்கிடையில் நீட் ஒரு தேசிய ஆபத்தாக வரும் என்பதை உணர்ந்து, 1.10.2021 அன்று எங்களுடைய தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 12 மாநில முதலமைச்சர் அவர்களுக்கு நீட் விலக்கை வலியுறுத்தி கடிதம் எழுதினார்கள். அந்தக் கடிதத்தில் கல்வி என்பது நம் மாநிலத்தினுடைய உரிமை. ஆகவே, அதை நாம் பாதுகாக்க வேண்டும். அந்த அடிப்படையில் தமிழ்நாடு அரசு ஒரு சட்டத்தைக் கொண்டுவர முயற்சி எடுத்திருக்கிறது. இதற்கு அந்தந்த மாநிலங்கள் ஆதரவு தரவேண்டும் என்று சொல்லியிருந்தார்கள். இப்போது அந்த மசோதாவிற்கு வருகிறேன். அந்த மசோதாவை அப்போதைய ஆளுநராக இருந்த திரு. ஆர். என். ரவி அவர்கள் 2.2.2022 அன்று அரசிற்கே திருப்பிய னுப்பினார். ஆனால், எங்களது தலைவர் அடுத்த 6 நாட்களில் அதாவது, 8.2.2022 அன்று உடனடியாக சட்டமன்ற சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி, மீண்டும் நீட் விலக்கு மசோதாவை நிறைவேற்றி மேதகு ஆளுநர் அவர்களுக்கு அனுப்பி வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**உச்ச நீதிமன்றத்தில் வழக்கு**

இந்த மசோதாவை இந்தமுறை கிடப்பில் போடமுடியாது. இரண்டாவதுமுறை அனுப்பிய மசோதாவை கிடப்பில் போடமுடியாது. ஆகவே, 15.3.2022 அன்று மேதகு ஆளுநர் அவர்களை நேரடியாகச் சந்தித்து, அந்த மசோதாவை உடனடியாக குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்புங்கள் என்று எங்களது தலைவர் அவர்கள் வலியுறுத்தினார்கள். அதைத்தொடர்ந்து மேதகு ஆளுநர் அவர்கள் அந்த மசோதாவை 4.5.2022 அன்று உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்பி வைத்தார்கள். இதைத்தொடர்ந்து, 4.9.2023 அன்று உள் துறை அமைச்சகம் அந்த மசோதா தொடர்பாக சில விளக்கங்களைக் கேட்டார்கள். அதற்கான பதிலையும் அன்று இருந்த எங்களுடைய அரசு சார்பாகத் தெரிவித்தோம். ஆனால், 27.2.2025 அன்று மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் அந்த மசோதாவிற்கு ஒப்புதல் தரவில்லை. அதாவது 'President withheld the assent' என்று என்று தமிழ்நாட்டிற்கு பதில் வந்தது. ஆனால், அமைச்சர் அவர்கள் சொல்லும்போது பார்த்தீர்களென்றால், நாங்கள் அனுப்பிய மசோதாவை கிடப்பில் போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். உடனே அன்றைய முதலமைச்சராக இருந்த எங்களுடைய தலைவர் அவர்கள் 9.4.2025 அன்று அரசு சார்பில் ஒரு அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டினார்கள். அந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு களின் அடிப்படையில், அதைத் தொடர்ந்து தமிழ்நாடு சட்டமன்றம் ஒருமனதாக நிறைவேற்றி அனுப்பிய நீட் விலக்கு மசோதாவிற்கு ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று தமிழ்நாடு அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இப்போதும் அந்த வழக்கு இருக்கிறது.

ஆனால், கழக அரசு நீட் விலக்கிற்காக செய்த இந்த விஷ யங்களைப் பற்றியெல்லாம் இந்த அரசு கொண்டு வருகிற தீர்மானத்தில் எந்த விவரமுமே இல்லாதது எங்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கின்றது. கழக அரசு தொடர்ந்த அந்த வழக்கை இந்த அரசு நடத்திக் கொண்டிருக்கிறதா? அதற்கு சரியான வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்களா? இதையெல்லாம் விளக்கவேண்டிய பொறுப்பு இந்த அரசிற்கு இருக்கிறது. நீட் ஒழிப்புக்காக கழக அரசு மட்டுமல்ல தி.மு.கவும் பல்வேறு பணிகளைச் செய்திருக்கிறது. தி.மு.க. வினுடைய இளைஞரணி, மாணவர் அணி, மருத்துவ அணி சேர்ந்து ஆகஸ்ட் 2023ல் ஒரு மாபெரும் உண்ணாவிரதப் போராட்டத்தை தமிழ்நாடு எங்கும் நடத்தினோம். அன்றைக்கு எங்களுடைய இளம் தலைவர் இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவர் அமைச்சராக இருந்தார்கள். அமைச்சராக இருந்தால் போராட்டத்தில் கலந்துகொள்ளக்கூடாது என்ற விதி உண்டு. ஆனாலும், என் அமைச்சர் பதவியைவிட நம் மாணவர்களின் கல்விதான் முக்கியம் என்று அன்றைக்கு உண்ணாவிரத அறப்போரை நடத்திக் காட்டியவர் தான் எங்களது இளம் தலைவர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**நீட் விலக்கு கோரி கையெழுத்து இயக்கம்!**

அதுமட்டுமல்ல, நீட் விலக்கு கேட்டு bike பேரணி, நீட் விலக்கு கோரி கையெழுத்து இயக்கம், நீட் ஒழிப்பு கருத்தரங்கம் எல்லாம் எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் முன்னெடுப்பில் கழக இளைஞரணி சார்பில் நடத்தப்பட்டது. இப்படி நீட்டிற்காக தொடர்ச்சியாக நாங்கள் போராடிக்கொண்டிருக்கிறோம். ஆனால், ** அதுகூட பரவாயில்லை, (குறுக்கீடு)

நான் வரலாறுதான் பேசினேன். முடிவாக இந்தத் தீர்மா னத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆதரித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறு கின்றேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு டாக்டர் முத்துராஜா பேசினார்.

---



# தி.மு.க. இளைஞர் அணி



### தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில், கல்வி, மருத்துவ உதவித்தொகை மற்றும் பொற்கிழியாகப் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 25 பேருக்கு

கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர்

**உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் ரூ.6,25,000/– வழங்கினார்.

கழகத் தலைவர் அவர்களது வழிகாட்டுதலின்படி, தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளையில் இருந்து, கழகத்தினர் மற்றும் பொதுமக்களுக்கு கல்வி, மருத்துவ உதவிகள் மற்றும் கழக முன்னோடிகளுக்கான பொற்கிழியாக, ஒவ்வொருவருக்கும் தலா ரூ.25 ஆயிரம் நிதி உதவியாக வழங்கப்பட்டுவருகிறது.

பொதுமக்கள் வழங்கும் மனுக்கள் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர், இளைஞர் அணி நிர்வாகிகளின் பரிந்துரையுடன் வரும் கோரிக்கை மனுக்களை ஆய்வுசெய்து, இந்த நிதி உதவிகளை வழங்கிவருகிறார், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

அந்த வகையில், ஆகஸ்ட் மாதத்தில் நிதி உதவிகளைப் பெறும் 25 பயனாளிகளின் விவரம் வருமாறு :

| வ. எண் | பெயர், முகவரி |
|---|---|
| 1. | தாஜ் நிஷா, க/பெ முஹம்மது ஜின்னா, 11, அசோகர் வீதி, இ.வி.பி.நகர், வெள்ளலூர், கோயம்புத்தூர் – 641 111 |
| 2. | ர.ராஜேஷ்குமார், த/பெ ரவிச்சந்திரன், 54, அக்கையா நாயுடு முதன்மைச் சாலை, திருத்தணி, திருவள்ளூர் – 631 209 |
| 3. | செ.தங்கேஸ்வரன், த/பெ செல்லப்பாண்டி, 2/438, கிழக்குத் தெரு, சுக்கிரவாரப்பட்டி, திருத்தங்கல், விருதுநகர் – 626 130 |
| 4. | சு.கீர்த்தனா, த/பெ சுரேஷ், 97/207, வெங்கட்ரங்கம் பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005 |
| 5. | மீ.நிஜாம்தீன், த/பெ மீரான்கான், 28/61–பி, அசேன் உசேன் தெரு, போடிநாயக்கனூர், தேனி – 625 513 |
| 6. | வெ.மீனா, க/பெ வெள்ளியங்கிரி, 4/44, குமாரசாமி நகர், காட்டன் மில் கிழக்குபுரம், பிச்சம்பாளையம், திருப்பூர் – 641 602 |
| 7. | மு.துளசிராமன், த/பெ முருகேசன், 13/1, கீழநத்தம், பில்லூர், நன்னிலம், திருவாரூர் – 609 403 |
| 8. | ரா.கீர்த்திகா, த/பெ ராஜா, 68/11, சத்தியமூர்த்தி நகர், நந்தனம், சென்னை – 600 035 |
| 9. | ப.கதிர்வேலு, த/பெ பழனியப்பன், 12, மரப்பாலம் சாலை–3, கே.ஆர்.எஸ்.நகர், கருங்கல்பாளையம், ஈரோடு – 638 003 |
| 10. | நீ.தினேஷ்குமார், த/பெ நீலகண்டன், 70, சிவன் கோயில் தெரு, பொன்னேரி, திருவள்ளூர் – 601 204 |
| 11. | ப.செந்தாமரைக்கண்ணன், த/பெ பழனி, பறையப்பட்டி, மொரப்பூர், அரூர், தருமபுரி – 636 903 |
| 12. | க.சாய்பிரசாத், த/பெ கருணாகரன், 12, மேட்டுத் தெரு, திருவான்மியூர், சென்னை – 600 041 |
| 13. | அ.நாகராஜ், த/பெ ஆறுமுகம், 32, ராஜாஜி வீதி, பொள்ளாச்சி சாலை, உடுமலைப்பேட்டை, திருப்பூர் – 642 126 |
| 14. | இ.ஷாமலதா, த/பெ இளையராஜா, 24/42, வேம்புலி சுபேதார் தெரு, ஆலந்தூர், சென்னை – 600 016 |
| 15. | கோ.கா.முத்துசாமி த/பெ காளியப்பன், 126/71, மணிமேகலை வீதி, புதுப்பாளையம், கோபிசெட்டிபாளையம், ஈரோடு – 638 452 |
| 16. | கா.சுகந்தி, க/பெ காளிராஜ், லோகநாதன் குடியிருப்பு, மயிலாப்பூர், சென்னை – 600 004 |
| 17. | ப.பாப்பாத்தி, க/பெ பழனிசாமி, 2/63, வடக்குத் தோட்டம், இளநகர், திருச்செங்கோடு, நாமக்கல் – 637 212 |
| 18. | அ.ரபின்சாபி, க/பெ அப்துல் ஹமீது, 35, தாஸ்கண்ட் நகர், 1–வது தெரு, விருதாசலம், கடலூர் – 606 001 |
| 19. | மா.ராஜசேகரன், த/பெ மாசிலாமணி, 3/25–பி, ஞானபுரம், குனியமுத்தூர், கோயம்புத்தூர் – 641 008 |
| 20. | பி.காஞ்சனா, க/பெ பிரகாஷ், 41/97, கே.சி.கார்டன், 4–வது தெரு, ஜவஹர் நகர், சென்னை – 600 082 |
| 21. | ஹ.சைலேஷ், த/பெ ஹரிஹரசுதன், 13/205, அண்ணா தெரு, கொசவன்பாளையம், திருநின்றவூர், திருவள்ளூர் – 602 024 |
| 22. | ஜூ.ஆத்திஃபா, த/பெ ஜூபிர் அலி, 31/33, ஐயர்துரை வீதி, பெரிய அக்ரஹாரம், ஈரோடு – 638 005 |
| 23. | பொ.ஜெயபாலன், த/பெ பொன்னுசாமி, 78–பி–பிளாக், நெடுஞ்செழியன் நகர், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை – 600 002 |
| 24. | சி.காமேஷ், த/பெ சிவக்குமார், 49, கொம்மம்பட்டு, கோவிந்தாபுரம், ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி – 635 207 |
| 25. | பா.பாலசுப்பிரமணியன், த/பெ பாண்டி, 9–13, கிழக்குத் தெரு, திருப்பரங்குன்றம், மதுரை – 625 005 |

**அன்பகம்**
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 12.08.2026

கலைஞர் 100
1924 - 2023

---

**ஓதுக்கப்பட்ட**

# ஓய்வூதிய நிதியைக் குறைத்திருப்பது அதிர்ச்சி அளிக்கிறது!

## தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றப் பொதுச் செயலாளர் நா,சண்முகநாதன் அறிக்கை!

சென்னை, ஆக. 14 –

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் ஓய்வூதியம், ஆசிரியர் தகுதித் தேர்வு ஆகியவற்றால் ஏற்பட்டு உள்ள பதட்டத்தையும் அச்சத்தையும் போக்கிட விரைந்து நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் மாநில பொதுச் செயலாளரும் ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளருமான முனைவர் மன்றம் நா. சண்முகநாதன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

முறையான கல்வித் தகுதியுடன் நியமனம் பெற்று பல ஆண்டுகள் கல்விப் பணியாற்றிய ஆசிரியர்கள் தங்கள் பணியை தொடர்வதற்கு ஆசிரியர் தகுதித் தேர்வு எழுத வேண்டும் என்ற உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. அதனால் ஆசிரியர்கள் தேர்வு எழுத தயாரிப்பு பணியில் ஈடுபடுவதால் மாணவர்களின் கற்பித்தல் பணிக்கு இடையூறாக உள்ளது.



தமிழ்நாடு இந்தியாவில் கல்வி வளர்ச்சியில் சிறந்த மாநிலமாக உள்ளது. அதை உருவாக்க பாடுபட்ட தொடக்கக் கல்வி ஆசிரியர்கள் இன்று தாங்கள் பணியில் தொடர்ந்து நீடிப்போமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. நீண்ட காலம் பணியாற்றிய ஆசிரியர்களின் பணியை பாதுகாத்திட மத்திய அரசு பாராளுமன்றத்தில் சட்ட திருத்தம் கொண்டு வர வலியுறுத்தி தமிழக சட்டமன்றத்தில் தனிச்சட்டம் இயற்ற வேண்டும்.

தமிழக வெற்றி கழகத்தின் தேர்தல் அறிக்கையில் பழைய ஓய்வூதிய திட்டம் அமல்படுத்தப்படும்என க்கூறி வாக்குகள் சேகரித்தனர். ஆசிரியர் அரசு ஊழியர்களின் நம்பிக்கைகளை பெற்று தமிழக வெற்றி கழக ஆட்சி உருவாகியது.

முதல் நிதிநிலை அறிக்கையில் இடைக்கால பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட ஓய்வூதியத்திற்கான நிதியினை குறைத்து இருப்பது ஆசிரியர் அரசு ஊழியர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது

ஒன்றிய அரசு கடன் பெற அனுமதி வழங்கினால் TAPS திட்டத்தை அமல்படுத்தலாம் என்று ஓய்வூதியம் தொடர்பாக அமைக்கப்பட்ட அலுவலர் குழுவின் தலைவர் ககன் சிங் பேடி பரிந்துரை செய்துள்ளார் என்றும்,

ஒன்றிய அரசு கடன் பெற ஒப்புக்கொண்டால் TAPS திட்டம் அமுல் படுத்தபடும் என்றும் நிதி அமைச்சர் சட்டமன்றத்தில் தெரிவித்துள்ளார். இது மேலும் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களை பதட்டம் அடையச் செய்துள்ளது.

இடைக்கால நிவாரணம் மட்டுமே நீடிக்க கூடும் என்பது ஏற்க இயலாது.

தமிழ்நாட்டில் ஆசிரியர் அரசு ஊழியர்களின் ஓய்வூதிய சேமிப்பு நிதி ஒரு லட்சம் கோடிக்கு மேல் இருப்பில் இருக்கிறது . மாதம்தோறும் ஊதியத்தில் 10% பங்களிப்பினை தொடர்ந்து செலுத்தி வருகின்றனர். அவற்றின் நிலை பற்றி ஆசிரியர் அரசு ஊழியர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

நிதியமைச்சரின் அறிவிப்புகளால் ஆசிரியர் அரசு ஊழியர்களின் குறிப்பாக அரசு திட்டங்களை அடித்தட்டு மக்களுக்கு கொண்டு சேர்க்கும் பணியில் செயலாற்றும் அரசு ஊழியர்களுக்கும் கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்ற இலக்கினை அடைய சிறப்பாக பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் தேர்தல் அறிக்கையில் கூறியவாறு பழைய ஓய்வூதிய திட்டத்தினை பட்ஜெட் கூட்டத்தொடரி லேயே அறிவித்து ஆசிரியர் அரசு ஊழியர்களின் பதட்டத்தை குறைத்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

# திருவாரூரில் இலவச பொது மருத்துவம் - கண் சிகிச்சை முகாம்!

## கே.எஸ்.எஸ்.தியாகபாரி – நாகை அசோகன் தொடங்கி வைத்தனர்!

திருவாரூர்,ஆக14.

திருவாரூர் கழக செயல் மறவரும் தமிழ்ச் சங்க செயலாளரும், லயன்ஸ் மாவட்டத் தலைவருமான ஆரூர் அறிவின் பிறந்த நாளை முன்னிட்டு, தஞ்சாவூர் காமாட்சி மருத்துவமனை மற்றும் கும்பகோணம் டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச பொது மருத்துவம் மற்றும் இலவச கண் சிகிச்சை முகாம் சிறப்பாக நடைபெற்றது.

முகாமை வேலுடையார் கல்விக் குழுமத் தலைவர் கே.எஸ்.எஸ். தியாகபாரி மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நாகை அசோகன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். நிகழ்ச்சியில் லயன்ஸ் மாவட்டத் தலைவர் ஆரூர் அறிவு அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் மாவட்டத் தலைவர் ஜாய் செந்தில், அலிவலம் ரவி, இஞ்சினியர் டேவிட், ரோலி பள்ளி நிர்வாகி முரளி தரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். சிறப்பாகப் பங்கேற்றவர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

மேலும், முன்னாள் லயன்ஸ் தலைவர்கள் ஜோதிநமச்சிவாயம், தியாகசுந்தரம், முனைவர் அறிவழகன், விஜய குமார், ஆர்.எஸ்.ஆர். ராமு ராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முகாமில் பொதுமக்களுக்கு இலவசமாக பொது மருத்துவப் பரிசோதனைகளும், கண் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு, தேவையான மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை திருவாரூர் விக்டரி லயன்ஸ் சங்கத் தலைவர் ராஜேஷ், செயலாளர் கார்த்தி, பொருளாளர் கலையரசு ஆகியோர் சிறப்பாக செய்தி ருந்தனர்.

முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.